அ.வ.எண். 40/2016 நாள்: 04.03.2026

வா.சா.1 திரு.சிதம்பரநாதன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 4, 5, 6, 7, 11, 12, 13 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகபிரிவினை கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பாகம் கேட்டுள்ள சொத்துகளுடன் வேறு சில சொத்துக்களும் சேர்த்து அம்மனியம்மாள் பெயரில் உள்ளது என்றால் சரிதான். அம்மனியம்மாளுக்கு மொத்தம் 3300 சதுரடி மனையும், அதில் ஒரு கூரைவீடும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அம்மனியம்மாளுக்கு மொத்தம் எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 7 ஆண்கள், பெண் குழந்தைகள் இல்லை. அம்மனியம்மாளுக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் அவரது சித்தப்பா செட்டில்மென்ட் வைத்திருந்தார். அம்மனியம்மாள் உயிரோடு இருக்கும்போது சொத்து சம்மந்தமாக எந்த ஒரு ஆவணமும் எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான்.

2) அம்மனியம்மாள் எப்போது இறந்தார் என்றால் ஞாபகம் இல்லை. அம்மனியம்மாள் வாரிசுகள் பெயர் தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் 1.வைத்தியலிங்கம், 2.மருதைய்யன், 3.தர்மராஜ், 4.நடராஜன், 5.கிருஷ்ணமூர்த்தி. 6.குமாரசாமி, 7.சண்முகம். மேற்படி 7 நபர்களில் யார்யார் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் எவரும் உயிருடன் இல்லை. நான் யார்யார் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வைத்தியலிங்கம் மகன் சுந்தரமூர்த்தி மீது தாக்கல் செய்துள்ளேன். நான் யாருடைய மகன் என்றால் மேற்படி தர்மராஜ் மகன் ஆவேன். இந்த வழக்கில் எத்தனை வாதிகள் உள்ளனர் என்று தெரியுமா என்றால் 7 பேர். வாதிகள் அனைவரும் யாருடைய வாரிசுகள் என்றால் தர்மராஜின் வாரிசுகள்.

3) அம்மனியம்மாள் வாரிசுகளில் தர்மராஜ் தவிர இதர வாரிசுகளின் வாரிசுகளை வழக்கில் சேர்த்துள்ளோமா என்றால் மருதைய்யன் மற்றும் சண்முகம் இருவருக்கும் வாரிசுகள் இல்லை என்பதால் அவர்களை தவிர மற்ற அனைவரையும் வழக்கில் சேர்த்துள்ளோம். அம்மனியம்மாள் சொத்தில் ஒவ்வொரு வாரிசுதாரரும் ஒவ்வொரு விஸ்தீரணத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி 3300 சதுரடியில் எவ்வளவு விஸ்தீரணம் எனது அனுபவத்தில் உள்ளது என்றால் 1080 சதுரடி ஆகும். மேற்படி 1080 சதுரடி எப்படி எனக்கு கிடைத்தது என்றால் காலிமனை 750

சதுரடி தவிர மீதியுள்ள இடத்தை பாகபிரிவினை செய்து கொண்டதில் எனக்கு கிடைத்தது.

4) மொத்தம் 3300 சதுரடி அம்மனியம்மாளுக்கு பாத்தியப்பட்டதாக இருக்கும்போது எனக்கு மட்டும் 1080 சதுரடி எப்படி கிடைத்தது என்றால் எனது அப்பா தர்மராஜ், சித்தப்பா கிருஷ்ணமூர்த்தி, சித்தப்பா குமாரசாமி ஆகிய மூவரின் பாகமும் எனக்கு கிடைத்தது. மேற்படி பாகம் கிடைத்தற்கு பதிவு செய்யப்பட்ட ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது, அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வைத்தியலிங்கம் மகன்தான் 3 ஆம் பிரதிவாதி சுந்தரமூர்த்தி. வைத்தியலிங்கத்திற்கு எத்தனை பேர் வாரிசுகள் என்றால் 4 மகன்கள், 1 மகள் ஆவர். அவர்கள் 1.தங்கவேலு, 2. பாளையன், 3. ஆறுமுகம், 4. சுந்தரமூர்த்தி, 5. நிர்மலா.

5) வைத்தியலிங்கத்தின் வாரிசுகளில் 3 ஆம் பிரதிவாதி தவிர இதர வாரிசுகள் வேறு இடத்தில் வசிக்கிறார்களா என்றால் இல்லை, மேற்படி 3300 சதுரடிக்குள்தான் அவர்களும் வசித்து வருகிறார்கள். நான் மேலே சொன்ன காலி இடம் 750 சதுரடிக்கான புல எண் என்ன என்றால் புல எண்.116/27, 116/45 ஆகும். மேற்படி காலிமனையான 750 சதுரடி புல எண்.116/27–ல் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது, புல எண்.116/45–ல் எவ்வளவு விஸ்தீரணம் உள்ளது என்றால் புல எண்.116/27–ல் 20 சதுரடி, புல எண்.116/45–ல் 55 சதுரடி ஆகும். வழக்குரை சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லைகள் எந்த சொத்திற்குரியது என்றால் 3300 சதுரடி இடத்திற்குரிய நான்கெல்லைகள் ஆகும்.

6) 3 ஆம் பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் என்ன கட்சி செய்கிறார் என்று தெரியுமா என்றால் தெரியும், காலிமனை அவருக்கு சொந்தம் என்று கட்சி செய்கிறார். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே சுந்தரமூர்த்தி நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.31/2016 என தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கின் விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி சுந்தரமூர்த்தி எவ்வளவு விஸ்தீரணத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் 550 சதுரடிக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி 550 சதுரடி இடம் சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் சரோஜா என்பவருக்கும் சுந்தரமூர்த்திக்கும் இடையே வழக்கு நடந்தது என்றால் சரிதான்.

7) மேற்படி சுந்தரமூர்த்தி தாக்கல் செய்த அ.வ.எண்.162/2007–ல் சமாதானம் ஏற்பட்டு கிழமேல் 8 அடி, தென்வடல் 55 அடி அளவுள்ள இடத்தை சுந்தரமூர்த்திக்கு சரோஜா என்பவர் கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல, அந்த சொத்து எங்களது பாட்டி அம்மனியம்மாள் சொத்தே தவிர சரோஜா சொத்து அல்ல. மேற்படி அ.வ.எண்.162/2007–ல் என்னையும் ஓர் தரப்பினராக சேர்த்துக் கொள்ள மனுதாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சொத்தில் எனக்கு உரிமையில்லை என்பதால்தான் சுந்தரமூர்த்தி தாக்கல் செய்த அ.வ.எண்.162/2007–ல் என்னை ஓர் தரப்பினராக சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

8) 3300 சதுரடியில் 750 சதுரடி காலியாக உள்ளது என்பதை காட்டுவதற்கு ஆவணம் எதுவும் எனது தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் 750 சதுரடி காலிமனை எதுவும் இல்லை என்றாலும், 3ஆம் பிரதிவாதிக்கு சொந்தமான கிழமேல் 8 அடி, தென்வடல் 55 அடி அளவுள்ள இடத்தை அபகரிப்பதற்காக 750 சதுரடி காலிமனை இருப்பதாக வழக்கில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி சுந்தரமூர்த்திக்கு பாத்தியப்பட்ட கிழமேல் 8 அடி, தென்வடல் 55 அடி அளவுள்ள இடத்தை சரோஜா 1997 ஆம் ஆண்டு ரெத்தினவேல் கட்சிராயர் மனைவி ஆயிபொன்னு என்பவரிடம் கிரையம் பெற்றார், அந்த சொத்துதான் 3ஆம் பிரதிவாதி சுந்தரமூர்த்தி வசம் இருந்தது என்றால் சரியல்ல.

9) வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு புலவரைபடத்தை பார்த்துள்ளேனா என்றால் ஆமாம். அந்த புலவரைபடத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். சுந்தரமூர்த்தி தாக்கல் செய்துள்ள வழக்கின் புல எண் தெரியுமா என்றால் புல எண் எதுவும் குறிப்பிடப்படவில்லை. அம்மனியம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை ஏற்கனவே பாகம் பிரித்து அவரவர் அனுபவித்து வருவதால் நான் கோரும் பாகபிரிவினை கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. 3300 சதுரடி இடத்தில் 750 சதுரடி பாகம் பிரியாமல் காலியிடமாக உள்ளது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்றிதழை தாக்கல் செய்துள்ளேன். நான் கிரையம் வாங்கிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தால் 750 சதுரடி இடம் காலிமனையாக இல்லை என்பது தெரிந்துவிடும் என்பதால்தான் நான் கிரைய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

10) எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் பாகபிரிவினைப்படி கிடைத்த சொத்தைதான் அனுபவித்து வருவதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் 750 சதுரடி காலியிடம் தவிர 2550 சதுரடி இடத்தை பொறுத்து மட்டுமே பாகபிரிவினை நடந்துள்ளது என்றுதான் குறிப்பிட்டுள்ளேன். 3 ஆம் பிரதிவாதி சுந்தரமூர்த்தி என்மீது வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் நான் அவர்மீது பாகபிரிவினை கேட்டு இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் 750 சதுரடியில் எவ்வளவு பாகத்தை கேட்கிறேன் என்றால் 3 நபர்களுக்குரிய பாகம் எனக்கு வேண்டும். நான் கோரியுள்ள பாகம் எவ்வளவு என்று என்னால் கூறமுடியாத நிலையிலும், மேற்படி பாகம் கோரியுள்ள சொத்து எங்குள்ளது என்று தெரியாத நிலையிலும் நான் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/ Chithambaranathan

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.04 13:16:43 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU